சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவுபெற்றது

# இந்து சாதனம்

Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

பிரதி விலை சதம் 40.

புத் - 93 ] யாழ்ப்பாணம்:- சித்தார்த்தி ஸு மாசி மீ 15, 22, 29-2-80., வெள்ளிக்கிழமை [ இல - 3

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

### தலைகாக்கும் தரும நெறி வகுத்த

# சைவ அம்மையார்

அறஞ்செய விரும்பி, அவ்வளவில் நின்றுவிட்டவர்கள் அநேகர். அகத்துணர்ச்சியால் உந்தப்பெறாது புறப்புகழ் பெறத் தரும நிகழ்ச்சிகளை உருவாக்கியவர்கள் பலர். நற்பணிசெய்ய நாடியவர்களைத் தடுத்து ஈவது விலக்கியவர்கள் எத்தனையோ பேர். இவ்வாறாக உலகத்திற் பல விதமாகக் காலங் கழிவதை எந் நாளும் காண்கின்றோம்.

ஆயினும் தருமம் ஒரு கடமை என்றறிந்து கருமமாற்றியவர்கள் இலை மறை காய் போல இந் நாட்டில் இருந்தார்கள் என்பதையும் நாம் மறந்து விடுதல் கூடாது.

உலகம் உய்யத் தொண்டாற்றிய உத்தமர்களைப் புண்ணிய சீலர் என்று ஆன்றோர் புகழ்ந்துள்ளனர். புண்ணிய சீலத்தின் பொருள் கொடுக்கும் பெயர் புனைந்த ஒரு அம்மையார் இந் நாட்டு வரலாற்றில் இடம் பெற்றிருப்பது தருமம் செய்ய விரும்புவோருக்கு நல் வழி காட்டும் வகையில் அறிவூட்டும் நிகழ்ச்சியாகும்.

புண்ணியநாச்சியம்மையார் என்று சொல்லும் பொழுதே உள்ளத்தில் ஒருவகையான உணர்ச்சி உண்டாகின்றது. மங்கையர்க்கரசியார் திலகவதியார் என்றெல்லாம் புராணப் பெயர்களை உச்சரிக்கும் பொழுது எழுகின்ற பூரிப்புப்போன்றது இந்த உணர்ச்சி.

இல்லறம் பயின்ற பின்னர்த் துறவறம் மேற்கொளளுதல் உலகியற்கையாகும். இதைச் சனகாதி முனிவர்க்குக் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்து இறைவன் எடுத்துரைத்தான என்ற பொருள் பொதிய மாணிக்க வாசகர்

': அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடி',

என்ற கேள்வியைக் கடாவி,

' அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ''

என உலகியற்கையை உகந்த வழியில் விளக்கிப் போந்தனர்.

புண்ணியநாச்சியார் அம்மையும் இந்த உலகியற்கையை நண்ணியவரா யிருந்தார் என்றுரைக்கின் அது பொருத்தமேயாகும். கரும காண்டம் அறிந்து பின் ஞான காண்டம் பொருள் கேட்பது முறை என்பது திருச் சாழலில் வரும் பாட்டின் நுட்பமன்றோ?

இந்தச் செம்மனச் செல்வியாரின் புண்ணியத்தைப் பேணிக் காக்கும் கடமை சைவ பரிபாலன சபையாருக்குரியது. புண்ணியக் கடமை பூண்டோர் புண்ணியம் செய்யும் வாய்ப்புப் பெற்றவராகின்றனர். எனவே சபையார் இந்த நற்பணியைச் சற்பாத்திரராக அமைந்து செய்யச் சைவமக்கள் துணை புரிவாராக

புண்ணியநாச்சி அம்மையார் தினம் சைவ பரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மாசித் திங்கள் 7 ஆம் நாள் ( 19-2-80 ) செவ்வாய்க்கிழமை வழமைபோலச் சிறப்பாகநடைபெற்றது.

வளர்ச்சி 3ம் பக்கம்

## பெருந் திருவிழா

காரைநகர் - மணற்காடு அருள்மிகு முத்துமாரி அம்பாள் கோவிற் பெருந் திருவிழா மாசித் திங்கள் 19- ஆம் நாள் (2 - 3 - 80) ஞாயிற்றுக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தேர்த்திருவிழா 15-3-80 சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா 16-3-80 ஞாயிற்றுக்கிழமையும் நிகழும்.

## கொழும்பு மாநகரில் நேபாள மன்னர் தம்பதிகள்

இவ்வுலகில் ஏக இந்து மன்னராய் எழில் அமைந்த நேபாள மன்னர் மாட்சிமை தங்கிய பிரேந்திரா பீர் பிக்ரம் ஷா தேவும் அரசியார் ஐஸ்வரிய ராஜ்ய லக்ஷ்மி தேவியும் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது விசேட நிகழ்ச்சியாகக் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசுரர் கோயிலிலே விசேட பூசைகளும் பஞ்சமுக அர்ச்சனைகளும் நடைபெற்றன.

தேவஸ்தானப் பெரியோர்களும் இந்து சமய தமிழ் அலுவல் அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை தம்பதிகளும் இராஜோபசாரங்களுடன் வரவேற்றனர்.

## சைவச் சிறுவர் இல்லம்

### விருதுக் கொடி விழா

ஆண்டுதோறும் நிகழ்த்தப்பெறும் சைவச் சிறுவர் இல்ல விருதுக்கொடி விழா 10-3-1980 அன்று கைதடியில் இல்லப் பிரார்த்தனை மண்டபத்திலே காலை 7 மணி தொடக்கம் நிகழவிருக்கின்றது.

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இவ்விழாவின்போது பருத்தித்துறை நீதவான் திரு. அ. ஞானச்சந்திரன் சைவக்கொடி ஏற்றி வைக்க, எதிர்க் கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆசி உரையும், உதவி அரசாங்க அதிபர் திரு. ச. துரைராசா சிறப்புரையும் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசாமி ஆரம்பவுரையும் நிகழ்த்துவர்.

பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. இ. இராஜசிங்கம், யாழ். வைத்தியகலாநிதி சேர். நிரஞ்சன் உட்படப் பல அபிமானிகள் வாழ்த்துரை பகர்வர்.

நிர்வாகச் செயலாளர் திரு. ஆ. கந்தையா நன்றி கூறுவர்.

மாசித் திங்கள் வரும்

குருபூசைப் பெரு நாட்கள்

## தென்னவனாய் உலகாண்ட செங்கணார் திரு நாள்

திருத்தொண்டர் புராணத்தில் மன்னிய சீர்ச் சருக்கத்து நான்காவதாய் விளங்கும் கோச்செங்கட் சோழ நாயனார் வரலாறு தனிச் சிறப்பு வாய்ந்தது. மண்ணாண்ட கொற்ற வேந்தர் ஆகத் திகழ்ந்த இவர் முற்பிறவிகளிலே இயற்றிய தவப்பேற்றின் உணர்ச்சியுடன் இப் பிறவி எடுத்தனர் என்று சேக்கிழார் பெருமான் அருமையாக விசேடிக்கின்றார். இப் பெருந் தபோதனரின் ஆட்சி மகிமை அவனர் அமைத்த ஆலயங்களின் பெருக்கத்திலே தோன்றிய தென்பர் புராண ஆசிரியர்

தென்னவனாய் உலகாண்ட சோழ மன்னன் ஆகையால் இரு பெரும் நாடுகளுக்கும் இவர்தம் அறம் செறிந்ததென்க. திருத்தொண்டர் திருவந்தாதி இச் சோழனின எழிலை,

"செம்பொன் அம் பலத்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணானெனு நித்தனையே"

வர்ணித்து வழங்குகின்றது.

தில்லைச் சிற்றம்பலத்துக்குச் செம்பொன் சிகரமமைத்த, இரணியவர்மச் சக்கரவர்த்திப் பெருங்குல வழி வந்த பெருமை இந் நாயனாருக்குண்டு.

பொன்னம்பலம் சிற்றம்பலத்தின் வேறு. அவ்வாறே பேரம்பலமும் முன்னையது ஆதித்தச் சோழரால் பொன் வேயப்பெற்றது; பின்னையது அநபாயரால் பொன் வேயப்பெற்றது.

சிதம்பரத் திருத்தலத்துத் திருவீதிகளும் மறையவர்வாழ் மாளிகைகளும் அமைத்த புகழுடையார். இவரின் மரபு மாண்புக்கு" அணியிற் புறவின் நிறை அளித்த சிபிச் சக்கரவர்த்தியின் நிறமிக்க அறம் சேக்கிழார் பெருமானால் எடுத்துக் காட்டப்படும் அருமையை நோக்குக.

மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்குவது மாண்புசால் அறமாகும் என்க.

சோழ நாட்டின் பெருமை பொன் கொழிக்கும் பொன்னியாற்று வளத்தாலாயது. அப்பெருங் காவிரி மாநதிக் கரையில் உள்ளது சந்திர தீர்த்தம், வரலாற்று வளமுடைத்து. தனக்கு இடப்பட்ட சாபத்தாலாய நோயைச் சந்திரன் இங்கு தீர்த்தமாடித் தீர்த்தனன் என்பர். தீர்த்தத்துக்கருகே பூங்காவுளது. ஆங்கு ஓர் வெண்ணாவல் ஓங்கி நின்றது. இந் நன் மர அடியில் இறைவன் தோற்றியருள, முற்றவப் பேறுடைய வெள் யானை துதிக்கையினாலே தீர்த்த நீர் முகந்து இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டி நறுமலர் மாலை சூட்டி வணங்கும் நித்திய நியமம் இருந்து வந்தது. எனவே இப பதிக்குக் காரணப் பெயரான திருவானைக்கா எனுஞ் நாமம் வழங்கத் தொடங்கியது. சிவன் திருமுனமேல் மரச் சருகுகள் படியா வண்ணம் காப்பான தன் வாய் நூலால் ஒரு பந்தலை பூர்வ புண்ணிய வயமாய சிலந்தி ஒன்று கட்டி விரித்ததெனபர். வாய் நீர் படிந்த வகையில் அசுத்தமென எண்ணி அவ் வலையை வெள்ளானை பிரித்துவிட மீண்டும் சிலந்தி வலை பின்னியது. மேலும் வெள்ளானை வலையை அழித்தது பொறுக்காது வெகுண்ட சிலந்தி துதிக்கையினிற் புகுந்து நுண்ணிய இடத்திற் புண்ணெனக் கடித்ததும் துன்பம் தாங்காத யானை துதிக்கையை நிலத்தில் மோதி சீர் குலைந்து வீழ்ந்திறந்தது.

( வளர்ச்சி 8-ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சித்தார்த்தி ஞு மாசி மீ
15, 22, 29-2-80 வெள்ளி

## பழையன பழகுவோம்

காலவகையினற் பழையன கழிந்து புதியன புகுந்த வாழ்வில் மக்கள் இப்பொழுது நிலைமாறாக் கேவலமாகி விட்டனர் என்பதை யார்தான் மறுப்பர்.

விஞ்ஞான ஆராய்ச்சி விரைய, விபரீதமான நுணுக்க சாதனங்கள் மக்களுக்கு நாளுக்கு நாள் புகுத்தப்பெற்ற வண்ணமாயிருந்த அரை நூற்றாண்டுக்குள்ளேயே அவற்றால் ஆபத்தும் விளைகின்றதென்ற எண்ணமும உண்டாகி விட்டது.

வேகத்துக்குத்தக்க விபத்து என்ற வகையிலே அசம்பாவிதங்கள் உலகெங்கணும் உண்டாகின்றன.

மண்ணிலிருந்து வலிந்தெடுக்கப்படும் நெய் மாபெருஞ்சத்தியாகி வாகனங்களுக்கு மட்டுமல்ல மற்றும் கொலைக்குரிய ஆயுதங்களுக்கும் உபயோகிக்கப்படலாயிற்று. இதன் பயனாக இந்த மண்வளத்தைக்கொண்ட நாடுகளை வலிமைமிக்க அரசுகள் மாயமாகத் தம்வசமாக்கி எரிபொருளைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய போரணிகளை சீராக்கியது மட்டுமன்றி பெருந்தனத்தையும் பேணி வந்தன.

ஆனல் எரிபொருளுக்குரிய நாடுகள் இவ்வுண்மையை உணரத் தொடங்கியதும் தாகு வியாபாரம செய்த அரசுகளுக்குத் தடை விதக்கும் வகையில இந்தப்பொருட்களின் விலை நாளுககு நாள் ஏற்றப்பட்டுவந்தது, இப்பொழுது எரிபொருள் உள்ள நாடுகளின் தஞ்சத்தில் ஏனைய தேசங்கள் வாழுமநிலை ஏற்பட்டு விட்டது.

இதற்கு என்னபரிகாரம்? இலங்கையைப் பொறுத்தமட்டில் போக்குவரதது 'மோட்டார்' விசை சத்தியிலேயே தங்கியிருக்கின்றது, இந்நாடு எரிபொருள் வளம் இம்மியளவும் இலாத நாடு. எனவே இங்கிலயிலும இந்தப் பொருள் இறக்குமதி செய்ய வேண்டும்.

எனவே போக்குவரத்துச் செலவு அளவுக்கு மேலாகி உச்சநிலையை அடைந்துவிட்டதெனலாம். பொன்னும் பொருளும் பெரிதும் படைத்த தனவந்தர்கள் கூடப் போக்குவரத்துக்குரிய வாகனங்களுக்கு எரிபொருளால் ஏற்பட்ட கதியை உணர வேண்டியவர்களாகி விட்டனர்,

இந்தச் சந்தர்ப்பத்திலே தான பழையனவற்றைப் பற்றிப் பரிந்துபேசப் பலர் முன்வந்துள்ளனர்.

முற்காலத்தில் மூலைமுடுக்குகளிலுமிருந்த மாட்டு வண்டிகள புதியன புகுந்ததும் காட்சிப் பொருட்களாகவே மாறிவிட்டன.

கமக்காரர் செல்வந்தரும் ஆன் இனத்தை ஆதரிக்காது இயந்திரங்களையே வரப்பிரசாதமாக வணங்கி வந்தனர், இப்பொழுதோ அவ்வியந்திரங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டதை உணர்ந்து பாட்டன் காலத்துப் பழக்கவழக்கங்களை மீண்டும் கையாள நினைக்க வேண்டியவர்களாய் விட்டனர்.

காலம் கற்பிக்கும் கல்வி இதுதான். மாடும் வண்டியும் போக்குவரத்துத் துறையை ஆண்ட மகத்தான காலம் மறுபடியும் வராதிருக்க முடியுமா?

மண்ணின் வளத்தை மறுபடச்செய்த செயற்கை உரமா. மாடும் ஆடும் வளர்த்துப் பெறும் எருவா, எது நீக்கற்றது என்ற பாடத்தை அநுபவமூலமாக நாம் கற்றுவிட்டோம்.

இனிமேலாவது புதியனவற்றைக் கண்டு மதிமிழந்து போகாது பாரம்பரியமாகவுள்ள பழைய வழிகளைப் பேணி வாழ்க்கையை நடத்த வழிதேடுவோம், இந்த மனமாற்றம் வருமாயின் மிருகபலி என்ற மிருகத்தனம் அருகிவிடும், சமயிகளாகவும் நாம் வாழ முடியுமல்லவா?

---

## இதுவன்றோ ஏற்ற நிகழ்ச்சி

சிவராத்திரிச் சிறப்பு என்றமலரை – இந்து சமய தமிழ் அலுவல் அமைச்சு வெளியிட்ட திறனை அம்மலரின் பொருள் அடக்கத்திலிருந்து நாம் அறிய முடிகின்றது

காஞ்சி காமகோடி பீடப் பெரியவர் அவர்கள் சிவராத்திரியின் சிந்தனையைப் பற்றி வெளியிட்ட கருத்துக்கள் உந்நதமானவை, அந்த மகிமைக்கு மகிமை செய்வான் போன்று கந்த புராணத்துத் தக்ஷ காண்டத்து அடிமுடி தேடு படலம் மூலமும கலாநிதி பண்டிதமணி அவர்கள் கருத்தோவியமும் இம்மலரை மேலும் மலரச் செய்கின்றன.

இந்து சமய அலுவல்களை என்ன வகையில் அமைச்சு எடுத்துவருகின்றதென்பதை இந்த அரிய முயற்சியிலிருந்து மக்கள் கண்டு மனப் பூரிப்படைவது இயல்பே.

இவ்வளவு மட்டுமல்ல இந்த அமைச்சு எடுத்திருக்கும் பிரசார இயக்கம் கணேச பஞ்சரத்தினம் என்ற அருமையான தோத்திர வெளியீட்டையும் அழகுற வெளியிட்டுச் சமயாபிமானத்தைத் தூண்டி வழிகாட்டுகின்றது குறிப்பிடத்தக்கது.

சைவ மக்கள் இப்பிரசுரங்களைப் பெற்றுப் பேணிப் பயனடைவார்களாக.

---

உ
சிவமயம்

# சைவ பரிபாலன சபை - யாழ்ப்பாணம்

## இலங்கை சைவ சமய பாடப் பரீட்சை — 1979.

5—11—79 ல் சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்பெற்ற
சைவ சமய பாடப் பரீட்சையில்

## அகில இலங்கைப் பரிசு பெறுபவர்கள் விபரம்

### 10 - ஆம் வகுப்பு

1. ● செல்வி வசந்தி சுப்பிரமணியம் (தங்கப் பதக்கம்) வட இந்துமகளிர் கல்லூரி
2. செல்வி சாந்தினி சாமிநாதன் — யாழ் இந்து மகளிர் கல்லூரி
3. செல்வி யாழினி இராமநாதன் — யாழ் யூனியன் கல்லூரி

### 9 - ஆம் வகுப்பு

1. ● செல்வி சிவாஜினி சிவஞானசுந்தரம் (தங்கப்பதக்கம்) யாழ் இந்துமகளிர் கல்லூரி
2. செல்வி காந்தவதனி அருணாசலம் — வேம்படி மகளிர்கல்லூரி
3. செல்வி ஜனனி கணேசன் — மானிப்பாய் மகளிர் கல்லூரி

### 8 - ஆம் வகுப்பு

1. ● செல்வன் சிவானுசாந்தன் அநவரதவிநாயகமூர்த்தி (தங்கப் பதக்கம்) யா/ முத்துத்தம்பி ம. வி.
2. செல்வி இந்திரா பொன்னுத்துரை — வேம்படி மகளிர் கல்லூரி
3. செல்வி தாமரா தனசிங்கம் — யாழ். கரம்பொன் திறிய புஷ்பமகளிர் ம. ம, வி.

### 7 - ஆம் வகுப்பு

1. செல்வி ஜீவராணி இராசரெத்தினம் — புதுக்குடியிருப்பு ம. வித்தியாலயம்
2. செல்வன் அருணகிரிநாதன் தங்கத்துரை — யாழ். இந்துக் கல்லூரி
3. செல்வி புஷ்பலதா சங்கரன் — மாத்தளை பாக்கிய வித்தியாலயம்

### 6 - ஆம் வகுப்பு

1. செல்வன் கனகசபாபதி வரதராசப்பெருமாள் — மானிப்பாய் இந்துக்கல்லூரி
2. செல்வன் அரவிந்தன் திருஞானசம்பந்தமூர்த்தி — சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம்
3. செல்வி விமலகுமாரி இராமலிங்கம் — வேம்படி மகளிர் கல்லூரி

### 5 - ஆம் வகுப்பு

1. செல்வன் சுகுமாரன் கனகரெத்தினம் — வலந்தலை வடக்கு அ. மி. பாடசாலை
2. செல்வன் சதீஷ்குமார் ஏரம்பமூர்த்தி — யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
3. செல்வி துஷ்யந்தி மாணிக்கவாசகர் — யூனியன் கனிஷ்ட வித்தியாலயம்

### 4 - ஆம் வகுப்பு

1. செல்வி ஷாமினி மாசிலாமணி — யா / திருநெல்வேலி இ. த. க. பாடசாலை
2. செல்வன் மகேந்திரகுமார் சோமசுந்தரம் — அச்சுவேலி மகா வித்தியாலயம்
3. செல்வி திருமகள் கார்த்திகேசு — தருமபுரம் இல II த. வி.

### 3 - ஆம் வகுப்பு

1. செல்வி பிரதாயினி யோகேஸ்வரன் — கந்தரோடை தமிழ்க்கந்தையாவித்தியாசாலை
2. செல்வி சிவரூபி சிவசுப்பிரமணியம் — ஞானசாரியர் கல்லூரி கரவெட்டி
3. செல்வி சுமதி துரைச்செல்வம் — விக்டோரியாக் கல்லூரி

### 2 - ஆம் வகுப்பு

1. செல்வி நந்தகுமாரி இராசையா — யா / ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை
2. செல்வி பிரியதர்ஷினி பாலசுந்தரம் — இந்து மகளிர் பிரதம பாடசாலை
3. செல்வன் மதிவண்ணன் சுப்பிரமணியம் — யா பெரியபுலம் மெ. மி, த. க. பா

### 12 - ஆம் வகுப்பு

1. செல்வி சாரதாதேவி தில்லையம்பலம் — யா இராமநாதன் கல்லூரி
2. செல்வி ரதிவதனி சுப்பிரமணியம் — வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி
3. செல்வி திருமாமணி கிருஷ்ணபிள்ளை — யா மெதடிஸ் உ பெண் கல்லூரி பருத்தித்துறை

### கூடியதொகையான மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்பியவகையில் பரிசு பெறும் பாடசாலைகள்

(1) யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
(2) யாழ் இந்து மகளிர் கல்லூரி
(3) யாழ் புத்தூர் சோமாஸ் கந்தக் கல்லூரி

☞ 1980 - ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடைபெறவிருக்கும் சைவ மகாநாட்டில் பரிசுகள், தராதரப் பத்திரங்கள் வழங்கப்பெறும்.

சைவபரிபாலன சபை,
18-2-80.

வ. கந்தசாமி
கௌரவ பரீட்சைச் செயலாளர்.

---

மகா கும்பாபிடேகம்

வேலணை தெற்கு - இலந்தை வனம் அருள்மிகு பூரணை புட்கலை சமேத ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் கோவில் மகா கும்பாபிடேகம் எதிர் வரும் 3-4-80 வியாழனன்றுநிகழும்

## நான்கு சாமங்களிலும் நாடெங்கும் நோன்பு

### பாலாவி கிரிமலைத் தீர்த்தங்களிற் பல்லாயிரம் பத்தர்கள்

**சிவராத்திரியிற் சிந்திக்க வைத்த திருக்கேதீச்சரத் திருமுறை அஞ்சல்**

இவ்வாண்டு சிவராத்திரியன்று நிகழ்ச்சிகள் அடியார்கள் எல்லோரையும் உரிய முறையில் விரதானுஷ்டானங்களைக் கைக்கொள்ளக் கூடிய வகையில் இடம் பெற்றன, பாடல்பெற்ற சிவஸ்தலமாயப் பண்டைய தீர்த்த வளப்புவாய்ந்த திருக்கேதீச்சரம் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மத்திய நிலையமாக விளங்கியது. சிவசிந்தனையில் இரவு முழுவதையும் கழிக்க அடியார்களுக்குகந்த ஒழுங்குகளைத் திருக்கேதீச்சர ஆலய நிருவாக அன்பர்கள் நன்குசெய்தமை குறிப்பிடத்தக்கது.

நகுலேஸ்வரத்தில் ஆண்டுப்பெருவிழாக்களைப் பூர்த்தியாக்கும் தேர் உலாவும் தீர்த்த விழாவும் யாழ்க்குடா நாட்டு அடியார்களின் முக்கிய கவனத்தைக் கவர்ந்தன. வியாழன் காலை தொடக்கம் வெள்ளி காலை வரை ஒரே பத்திப்பிரவாகமாகச் சமய நிகழ்ச்சிகள் தொடர்ந்து விளங்கின.

சிவசத்தி சம்பந்தமான இத்திருநாளில் தெல்லிநகர்த் துர்க்கையம்மன் கோயிலில் ஏற்ற ஒழுங்குகள் நன்கமைக்கப்பெற்றன.

ஏனைய கோயில்கள் யாவற்றிலும் சிவராத்திரி விசேட நிகழ்ச்சிகள் ஆர்வத்துடன் நிகழ்ந்தன.

திருக்கேதீச்சரத் திருமுறைப் பாராயண அஞ்சல் அங்கு செல்லவியலாதிருந்த பல்லாயிரம் மக்களுக்குப் பேருதவியாக இருந்தது பாராயணம் பண்ணியவர்களின் பத்தி வானொலி வாயிலாக ஊடுருவிக் கேட்போரின் செவிப்புலன்களை மட்டுமல்ல உள்ளத் துணர்ச்சியையும் செறிந்துநின்றது.

கிரிமலைச் சிவநெறிக் கழகம் வண்ணைச் சாக்தையர் மடக் கற்பகவிநாயகர் ஆலய சமய அபிவிருத்திச் சபை முதலியன விசேட நிகழ்ச்சிகளை நடத்தின.

சைவபரிபாலன சபையார் வழமைபோலச் சமயப் புனித முறையில் சிவராத்திரி விரத அநுட்டானத்துக்குரிய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினர்,

---

### மாசித் திங்கள் வரும் குருபூசைப் பெருநாட்கள்

1 - ஆம் பக்கத்து வளர்ச்சி

திருத்தொண்டாற்றிய வகையில் உயிர் நீத்த சிலந்திக்கும் வெள்ளானைக்கும் மறை முதல்வராம் மாதேவனார் வரங் கொடுத்ததன் பயனாகச் சிலம்பியும் சோழர்குலத்துதித்து அரசு புரியும் பரிசுடைய செங்கண்ணனாய் உலகிற் றோற்றம் உற்றது.

சிலம்பியாயிருந்து கோச்செங்கட் சோழனும் இலங்கிய தொண்டரின் பெருமையைச் சேக்கிழார் தெவிட்டாத இன்பம் திகழ்க்கும் பாக்களில் அமைத்த பாங்கினையிங்கு காண்போமாக.

சோதை வேலார் கோச்செங்கட் சோழர் தாமிக் குவலயத்தில்
ஆதி மூர்த்தி அருளான்முன் அறிந்து பிறந்து மண்ணுள்வார்
பூத நாதன் றான்மகிழ்ந்து பொருந்தும் பெருந்தண் சிவாலயங்கள்
காதலோடும் பலவெடுக்கும் தொண்டு புரியுங் கடன் பூண்டார்,

முன்னை நிலைமை யறிந்த மூதறிஞராகுதல் புண்ணியப் பேறுமெனக அவ் வறிவின் செறிவு முன் சிலந்தியாய்ச் செய்த சிவாலயத் தொண்டு முற்றுப் பெருமையை முன் வைத்துப் பின் எடுத்த பிறப்பில் அதனைத் தொடர்ந்து திருப்பணி செய்யும் கடமையைக் கொண்டு சிவாலயங்கள் பல எடுத்தார் என்று விளக்கந் தருகின்றார் சேக்கிழார் அடிகள்.

சிவாலயம் அமைத்தலின் சிறப்பினையும் அருமையையும் நாம் அறிவோமேயானால் அவற்றைப் பேணிப் போற்றித் திருத்தொண்டியற்ற முன் வருவோம். எத்தனை சிவாலயங்கள் ஈழத்திருநாட்டில் சீர் குறைந்திருக்கின்றன. எத்தனை கோயில்கள்தானு இவை? என்றளவில் எழிலற்றிருக்கின்றன.

கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்தைப் படிக்கும்பொழுதெல்லாம் திருக்கேதீச்சரத்திலே திருப்பணிச் சிறப்புப் பழைய முறையிலே கொண்டு தொண்டு விழைபவர்களும் இருக்கின்றார்கள் என்ற எண்ணம்எழுகின்றது.

பண்செய்த பணியின் நினைவு தூண்ட நாயனார்,

"ஆனைக் காவிற் றாமுன்ன மருள்பெற் றதனை யறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழுங் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணாவ லுடனே கூட நலஞ்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமா னமருங்கோயிற்பணிசமைத்தார்"

என்று திருத்தொண்டின் பொலிவைப் புராணகாரர் புனைந்துரைத்தல் காண்க.

அக்காலத் தரசன் அறம் வளர்த்தான். அவன் அமைச்சர்களும் அவ்வண்ணம் அணைந்தார் என்பதை

---

### அலங்காரத் திருவிழா

நல்லூர் - நாயன்மார்கட்டு குளத்தடிப் பிள்ளையார் கோயில் அலங்காரத் திருவிழா வரும் 9-3-80 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நிகழும். திருவிழாத் தினங்களில் யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளைநடாத்தவுள்ளனர்.

---

### தலைகாக்கும் . . . .

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

எங்கள் அம்மையார் தன் கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்ந்து வாராகையால் அப்புண்ணியம் இன்றும் நின்று நிலவுகின்றது. இத்தருமத்தைக் கையேற்று நடத்துந் தகைமை பெற்றவர்கள் யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலனசபையார். நாச்சியார் செய்தபுண்ணியத்தை எண்ணி அவ்வெண்ணத்தை ஓச்சிவரும் சைவபரிபாலனசபையார் என்ன புண்ணியஞ் செய்தனரோ என்று நாம் வியப்புறல் வேண்டும்.

தருமமாகத் தந்துதவிய பெருமக்களை நினைவுகூரும் பொழுது பெருமை அவர்களுக்கு நாம் பெருக்குகின்றோமென்பதல்ல, என்னை! அவர்கள் பயன்கருதாது புண்ணியஞ் செய்தனர் என்க. நினைவுகொள்ளும் நாம் தருமநெறி நிற்றலைப் புரிந்து வருகின்றோம் என்று திருப்தி கொள்வதுவும் இன்னும் மெய்யடியார்கள் இத்தகைய உத்தம தருமங்களை இயற்ற எடுத்துக்காட்டாய் இது அமைகின்றதென அறிவுறுத்தும் கடமை செய்வதுவும் இந்நிகழ்ச்சியால் எழுவனவாகும்.

தருமப் பொறுப்பைச் சுமப்பவர்கள் முடிசூடும் மன்னர்களுக் கொப்பர். மகுடத்தின் பெருமைக்கேற்ப மன்னர் ஆட்சிபுரிய வேண்டுவது அவன் கடமையாதல் போல அறங்காவல் செய்வது நற்பொறுப்பாளர்களிற் சுமத்தப் பெற்ற பெரும் கடமையாகும் எங்கள் சபையார் இந்த இலட்சியத்தை என்றும் எண்ணிய வண்ணம் இயங்குதல் வேண்டும்.

---

'மந்திரிக டமையேவி வள்ளல்
கொடை யநபாயன்
முந்தைவருங் குலமுதலா
ராயமுதற் செங்கணார்
அந்தமிலசீர்ச் சோணாட்டி
லகனாடு தொறுமணியார்
சந்திர சேகரனமருந்
தானங்கள்பல சமைத்தார்''

என்று புராணப் புலவர் விதந்து பாடுகின்றார்.

மாடக் கோயில்களின் சிறப்பைத் தென்னிந்திய தலங்களிலேதான் காண்கின்றோம்.

நாயனார் ஈற்றிலே தில்லை வாழ் அந்தணர்களுக்கு மாளிகைகள் பலவமைத்து நடராசப்பெருமான் திருவடிநீழலைச் சேர்ந்து பேரின்பமுற்றார்.

---

## புனித இடங்களுக்குப் பொருந்துமா உல்லாச விடுதிகள்

ஒவ்வொரு நாட்டிலும் இக்காலத்தில் உல்லாசப் பிரயாணிகள் இருக்கின்றனர். இவர்கள் உண்டு உடுத்து உவகை கொள்வதிலேயே உள்ளத்தைக் கொள்ளை கொள்ள விட்டிருப்பவர்கள், எவ்வகையிலோ தேடிய அல்லது சேர்ந்த செம்பொன்னும் வெண் பொன்னும் பெருந் திரவியமாகத் தனவந்தர்களாகுமிவர்கள் உலகம் சுற்றியவண்ணம் இருப்பர். செல்லும் இடங்களிலெல்லாம் இவர்களை ஒவ்வொரு அரசும் வருக வருக என்று வரவேற்கின்றது. இதற்கு என்ன காரணம்!

அந்நிய நாட்டுப் பணம் என்றால் அது ஒரு அதிட்டலாபம், எவ்வளவு இந்தப்பணம் கிடைக்கின்றதோ அவ்வளவுக்கு அந்த நாட்டின் பொருளாதாரம் பூரிக்கும். எனவே உல்லாசப் பிரயாணிகளுக்கு எல்லா வசதிகளும் செய்வதில் அரசினர் பரிந்து கரிசனை காட்டுவது நூதனமல்ல.

ஆனால் இந்த உல்லாசக் களியாட்டுகளுக்கு எல்லா இடங்களும் உகந்தனவா என்று சற்று யோசிக்க வேண்டியது அரசனர் கடமை,

எல்லா மதங்களையும் பேணி அவற்றின் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதே தர்ம அடிப்படையுள்ள அரசுக்குரிய குறிக்கோள். ஆகவே புனித இடங்கள் என்று வகுக்கப்படுவன திருக் கோயிலைச் சுற்றிய சூழல்களையேதான் ஆகவே ஆலயங்களுக்கு அண்மித்த இடங்களிலே உல்லாச விடுதிச் சாலைகள் அமைப்பது மத ஒழுங்குக்கும் மனிதாபிமானத்துக்கும் மாறாகும். இன்னும் விளக்கமாக எடுத்தியம்பினால், மதுவும் மாமிசமும் வழங்கப்படும் விடுதிச்சாலைகள் கோயிற் சூழலுக்கு அந்நியமானவையன்றோ!

எனவே புனித இடங்களை வகுப்பது அரசின் முதற் கடமையாகும். இந்து கலாசார அலுவல்களுக்குரிய அமைச்சு ஒன்று இப்பொழுது செயற்படுகின்றது. அந்த அமைச்சர் நல்லதோர் முயற்சியில் இறங்கியிருக்கின்றனர். கோயில்கள் எங்கெங்கே இருக்கின்றன, அவற்றின் வரலாறுகள் என்ன? என்றெல்லாம் விபரங்கள் திரட்டுகின்றனர். அவ்வாறு ஈழத்திலே உள்ள ஆலயங்களைப்பற்றி வேண்டிய விபரங்களை அவற்றிலே பெருங் கோயில்கள் புராதனக் கோயில்கள் ஏனையவை என்ற தரங்களைப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் புனித இட எல்லையைக் குறித்து அரச அங்கீகாரம் பெற்றுப் பிரகடனம் செய்விப்பதற்கு இந்த அமைச்சு உழைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் எழுந்திருக்கின்றது.

ஆகவே உல்லாச விடுதிகளை அமைப்பதிலே அரசு அவதானமாக இருத்தல் வேண்டும். எந்த ஒரு புராதனப் பெருமையுடைய தலத்துக்கும் ஒரு கல் தொலைவுக்குள் உல்லாச விடுதிச்சாலைக்கு இடங்கொடுப்பது தருமமாகாது.

---


ஈட்டு வழக்கில்

## விற்பனவுக்கான அறிவித்தல்

இமையாணன் 1. பொன்னம்பலம் நல்லதம்பி
2, பெண் அலிசு
— வழக்காளிகள்

இல: ஈ.D. 15029 எதிராக

கரணவாய் தெற்கு இராமு ஆறுமுகம்
— எதிராளி.

மேற் குறித்த இலக்கவழக்கில் தீர்ந்ததீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1980 ஆம் பங்குனி மீ 8-ஆ சனிக்கிழமை காலை 10—30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் நவிண்டிற் குறிச்சியிலை "ஆண்டிபுலமும நெவகட்டையப் புலமும்" இப் பிரிவுகள் 1951 ம் ஆம் கார்த்திகை மீ 18 உ உலாநதா மேஸ்தர் தா. சுப்பிரமணியம் என்பவரால் 1548 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட அளவைப்படத்தின்படி 2 ம் நம்பர்த் துண்டுக்கு நிலப்பரப்பு 3 குழி 10· எல்லை கிழக்கும் மேற்கும் பொன்னர் சின்னத்தம்பிக்குடையவாதனம், வடக்குஎதிரிக்குடையவாதனம் தெற்கு ஒழுங்கைப் பாவிப்புநிலம் . இவ்வெல்லைக் குட்பட்டவையடங்கலும் தெறவெல்லை ஒழுங்கைப் பாவபபுரித்தும்.

| | |
|---|---|
| தரட்சித் தொகை | ரூபா 1682 - 50 |
| இதில் ரூபா 1000/-க்கு 15 - 5 - 1979 தொடக்கம் 4-9-1979 வரை 18 வீத வட்டி | ரூபா 60 - 00 |
| ரூபா 1682 - 50 க்கு 5-9-79 தொடக்கம் 6-3-1980 வரை 9 வீத வட்டி | ரூபா 75 - 69 |
| | ரூபா 1758 - 19 |

நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட விலைப் பெறுமதி மொத்தம் ரூபா 10,500/—

R. S. இராமநாதன், J. P.
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர்
பிரசித்த ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales'
Valuer & Auctioneer.
No. / 199 1491 - J 15-2-80.

'உமாபதி
நெல்லண்டை ரேட்டு.
தும்பளை,
பருத்தித்துறை, 13-2-80

Hindu Organ

Friday, 15, 22, 29-2-80.

## TEMPLES & TEMPORALITIES

Now that there is a Ministry for Hindu Affairs, we wish to place before the Minister, certain suggestions that would be helpful to ensure the preservation of public establishments pertaining to Temples that are covered by the term 'Temporalities'

Ancient and renowned places of worship in our country have an all-Island import. These Shrines have resting places called **Madams** and tanks known as **Theertham**. all of which are intended for the use of worshippers.

It is a well known fact that these Madams and Theerthams are not maintained in the manner they ought to be preserved Worshippers seldom realize the sacredness of these places and often use them in a negligent manner, The result has been the decay of these Madams and Theerthams.

The management of Temples and their Temporalities is of a complex form varying from private ownership, private Trust, public Trust and similar administration both authoritative and popular. Hence there cannot be uniformity; nor can there be rigidity of diciplins.

Saiva Shrines have to be in conformity with traits and rules of Veda-Sivagama Shastras; every detail has to be in accordance with these requirements. Hence the administration of such Temples cannot be but entrusted to practioners of Veda - Sivagama precepts. Such practitioners must of necessity be learned in the Veda-Sivagama Shastras But, unfortunately this has not been the practice. Though there are High Priests highly proficient in the study and practice of Veda - Sivagama precepts, yet they being only handful, the benefit of their knowledge and experience cannot be available to all Temples, Hence the existence of inappropriate bodies that carry on the administrative affairs of Temples.

We, therefore, wish that the Ministry would be so good as to examine the prevailing conditions and propose adequate remedial measures so that the purpose of Temples and Temporalities may be served according to religious requirements.

In this connection we are obliged to point out that several madams are in a very dilapidated state and exist as eye-sores; while others are in undesirable conditions of administration.

Tanks or Theerthams are in most cases in a neglected state, Impurities are never cleared, steps if there are any, are moss - covered, often tending to cause mishaps to devotees who use them carelessly,

The subject is as extensive as it is important The Ministry will have to devote sufficient time to collect information regarding these Institutions as a preliminary step.

# Where All Religions Work Together

## To Guide a man Towards Godliness

*Rev. Dr James S. Mather has favoured us with a book-let on "The Greatness of the Lord Jesus Christ. At a time when the whole world is enveloped in the darkness of self-fishness and man is feeling utterly miserable, it is heartening to note that readers of different religious persuasions are toiling hard to teach man that one need not despair if only one would know the* TRUTH *and learn to be truthful to* GOD. *Extracts from this enlightening booklet are chosen for commendation in these columns with a view to making our readers understand the fact that there is a Highest Common Factor in all religious teachings that portrays the essence of religious life, namely* GOOD - WILL GENERAL WELFARE - GODLINESS

THIRUMANTHIRAM, a revealed exposition of religious Tenets, presented to humanity by Saint Thirumoolar, thousand years ago has this precious poem, pleasing to recite and piercing in thought.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.

'Ignorant people think that love and God are different from each other unable to understand that both are but one. However, once they realize this significance, they would rest contended in God as love'"

THIRUKURAL, another revelation by another Saint, Thiruvalluvar known to all languages as one of the greatest Teachers, dwelling on love (அன்பு) depicts the virtue of love as precedent to the quality of sacrifice.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

Selfish are those who are loveless, striving to have everything to themselves; but the loving would sacrifice even their bones or in other words their life for the sake of others.

Here is a maxim uttered as a spiritual pronouncement as far back as,

Making these comments in the Tamil month of Masei occasion of the Holy Maha Sivaraththri the picture of Providence as the Effulgent Light looms largely before us.

The author of this attractive booklet appropriately quotes St. John 8 : 12 "I am the Light of the world" 'The Lord is my Light and Salvation" book of psalms : 27

Correspondingly there is reference to the absence of Light — Darkness

"Ever one that do-eth evil hateth the Light, neither cometh to the light, lest our deeds should be reproved.

Saiva Shastras depict Parameshwara as Radiant Light "Jothi". The Holy Thirumurais almost in every verse refer to this Eternal Effulgence—ஒளி சுடர், பிரம்பு, சோதி, கதிர் to mention only a few.

And that which is impure, the (மும்மலம்) known as Anavam, Kanmam and Maya, has been described as Darkness.

The Solar Eclipse has also reminded us of what difference it makes, obscuring of the light. Scientists are unanimous in their opinion that such a happening forbodes evil, Religions do, say so all in one voice, that the obscuring of knowledge by ignorance nay by obdurate ignorance certainly will lead to decay.

This truism is equally true to all, Hindus, Buddhists, Christians, Muslims and everybody else excepting, of course, those who do not believe in the existence of God.

Where then is darkness? In atheism of course!

As the world stands today more countries look to Marxism for leadership or in plain language have common truck with the dark forces of political preachings that are in direct conflict with RELIGION

The reference to the fruitless fig tree calling for religion to be practised in a fruitful way and the comment on Bread and husks are a realistic approach to the solving of man's multifarious problems.

The booklet affords interesting and instructive reading particularly, the pages on pseudo Socialists and their lip service to socialism as contrasted with the socialistic basis of all religious faiths.

## The Jaffna Co-operative Stores Ltd.

WHEREAS Subramaniam Vallikanthan presently of Jeddah, Saudi Arabia has applied to the Directors of the abovenamed Company for the issue of a Duplicate Certificate in respect of Twelve (12) Ordinary Shares, numbered 6463-6474, registered in his name, the original of which is represented to have been destroyed, lost or mislaid; NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate the Original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
15th February, 1980

T. SOMASUNDARAM
Secretary

## அருள்நெறி மன்ற வெள்ளி விழாவில்

அறிஞர்
அ. ச, ஞானசம்பந்தன்

திருக்கோணமலை இளைஞர் அருள் நெறி மன்றத்தின் வெள்ளி விழாவும் பத்தாவது திருமுறைவிழாவும் 1-3-1980 தொடக்கம் 3-3-1980 வரைக்கும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறுமென்றும் அவ்வமையம் சிறப்புச் சொற்பொழிவு சென்னைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் நிகழ்த்துவர் என்றும் பண்ணிசை திருப்பனந்தாள் மடத்து இசைக் கலைஞர் சோ. முத்துக்கந்தசுவாமி தேசிகர் நடத்துவாரென்றும் மன்றச் செயலாளர் அ[illegible] கின்றனர்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone 356) on Friday, 15, 22, 29-2-80*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam